**I Additional District Court, Thoothukudi.**

**<u>O.S.No.127/2021 நாள் : 22.07.2025 வா.சா.1– திரு.கண்ணன்.</u>**

**குறுக்கு விசாரணை :–**

1ம் வாதி என் மனைவி. அவர் கோவில்பட்டியில் இருக்கிறார். அவர் நடமாட கூடிய நிலையில் இருக்கிறாரா என்றால் அவர் சிகிச்சையில் இருக்கிறார். அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டுவிட்டது. அதற்கான மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி நல்லநிலையில் இருக்கிறார் என்றும், அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் வாதி என் மகன். 2ம் வாதியும் கோவில்பட்டியில்தான் இருக்கிறார். முதலில் வழக்கு தாக்கல் செய்யும்போது கிரைய ஒப்பந்த நடவடிக்கையில் நான் ஈடுபட்டதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து நாலாட்டின் புதூரில் உள்ளது. புல எண்கள் 14/1, 21/2 ஆகியவற்றில் தாவா சொத்து உள்ளது. புல எண் 14/1ல் 1.81 ஏக்கரும், 21/2ல் 1.42 ஏக்கரும் ஆக மொத்தம் 3.20 ஏக்கர் குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 3.20 ஏக்கர் குறித்து அளவுகளை அறிந்துகொள்ள படி கட்டி நில அளவையர் மூலமாக சொத்தை அளந்தோமா என்றால் இல்லை. 3.20 ஏக்கருக்கு எல்லைகள் சொல்லமுடியுமா என்றால் சொல்ல முடியும். வழக்குரையில் நான்கு மால்கள் சொல்லப்படவில்லை. வா.சா.ஆ1 ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை. கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்ய வேண்டியது கட்டயமில்லை. அப்படி ஒரு சட்டம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ1 ஒப்பந்தத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் அப்போது கொரோனா காலம் என்பதால் பதிவு செய்யவில்லை. வா.சா.ஆ1 காலத்தில் ஊரடங்கு அமலில் இருந்தது. வா.சா.ஆ1க்கான முத்திரை தாள்களை நான்தான் கோவில்பட்டி முத்திரைத்தாள்

விற்பனையாளர் ஜெகநாதன் என்பவரிடம் வாங்கி வந்தேன். ஊரடங்கு காலத்தில் எல்லா நடைமுறைகளையுமே நிறுத்தி வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் முத்திரைத்தாள் விற்பனையாளர் மட்டும் திறந்து வைத்திருந்தார். 04.03.2020–ல் மாலையில் முத்திரைத் தாள்களை வாங்கினேன். மாலை நேரங்களில் ஊரடங்கு நேரத்தில் யாருமே வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று மாவட்ட நிர்வாகம் கட்டுப்பாடு விதித்திருந்தது என்றால் இல்லை. ஊரடங்கு இருந்தாலும் ஆள் நடமாட்டம் இருந்தது. பத்திரம் எழுதியதாக சொல்லப்படும் நேரம் கொரோனா காலகட்டம்தான். பத்திரத்தை எழுதியவர் கோவில்பட்டியைச் சார்ந்த இளங்கோவன். அவர் பத்திர எழுத்தர். கிரைய ஒப்பந்தத்தில் அதை யார் எழுதினார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஒப்பந்தம் தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி முத்திரைத்தாள் விற்பனையாளரிடம் உதவியாளராக இருந்த ஒரு பெண் ஒப்பந்தத்தை தட்டச்சு செய்தார். 04.03.2020–ல் ஒப்பந்தம் தட்டச்சு செய்யப்பட்டது. அப்போது பிரதிவாதி என்னுடன் வரவில்லை. அதனால் ஒப்பந்தம் தயாரிப்பதற்கு பத்திர எழுத்தருக்கு அனைத்து சங்கதிகளையும் சொன்னது நான்தான். பிரதிவாதி கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் சொன்னேன். 05.03.2020 அன்று பிரதிவாதி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். பிரதிவாதியின் தாயார் பெயரில் உள்ள ஆவணம். பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணம் ஆகியவற்றை பிரதிவாதி என்னிடம் கொடுத்தார். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். என் மகளுக்கு மார்ச் 2021ல் திருமணமானது. 2ம் வாதி எந்த வேலையும் பார்க்கவில்லை வீட்டோடுதான் இருக்கிறார். அவர் தொழிலும் செய்வதில்லை. 2ம் வாதிக்கு தனிப்பட்ட வருமானமும் இல்லை. 1ம் வாதி நவதானியம்

விற்பனை தொழில்செய்து வருகிறார். அந்த தொழிலின் பெயர் KR டிரேடர்ஸ். அதற்கு பதிவுச் சான்றிதழ் யார் பெயரில் உள்ளது என்றால் அதற்கு பதிவுச் சான்றிதழ் இல்லை. மேற்படி விற்பனைக்கு சரக்கு மற்றும் சேவை வரி உண்டு என்றால் அப்போது இல்லை. ஆண்டுக்கு ரூபாய் 20 லட்சத்திற்கு மேல் turn over இருக்கும்போது சரக்கு மற்றும் சேவை வரி கட்டாயம் என்றால் சரிதான். 1ம் வாதி எந்த தொழிலும் செய்யவில்லை என்றும், KR டிரேடர்ஸ் என்ற பெயரில் நவதானிய விற்பனை செய்து வருவதாக பொய்சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் வாதி KR டிரேடர்ஸ் என்ற பெயரில் தொழில் செய்வதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 13 வருமானவரி கணக்கு 2010 முதல் 2022ம் ஆண்டுகளுக்கு சம்பந்தப்பட்டது. சரக்கு மற்றும் சேவை வரி 2017ல் அறிமுகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். சாட்சியிடம் வா.சா.ஆ 13–ஐ காட்டி அதில் என் மனைவி KR டிரேடர்ஸ் நடத்தி வந்ததாக சொல்லப்படவில்லை என்றும், KR டிரேடர்ஸ் நடத்தி வந்ததாக 1ம் வாதி பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றும் சொன்னால் சரிதான். வா.சா.ஆ 13ல் 2019 – 2020 ஆண்டிற்கு ரூபாய் 2,670/– வருமான வரி கட்டியுள்ளார். 2020–2021ம் ஆண்டில் என் மனைவி வருமானவரி கட்டவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போது கொரோனா காலம். வா.சா.ஆ 1 காலத்தில் 1ம் வாதி சொத்தை வாங்குவதற்காக ரூபாய் 50 லட்சமோ அல்லது ரூபாய் ஒரு கோடியோ கட்டியதாக வா.சா.ஆ 13–ல் காட்டவில்லை. கையில் இருக்கும் ரூபாய் 50 லட்சத்தை வருமானவரி கணக்கில் காட்ட வேண்டுமா என்றால் எனக்கு தெரியாது. ரூபாய் ஒன்றரை கோடி 1ம் வாதிக்கு எப்படி வந்தது என்பதற்காக ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி ரூபாய் ஒன்றரை கோடி

செலுத்துவதற்கு சக்தி இல்லாத நபர் என்றால் சரியல்ல. முதலில் வழக்கு தாக்கல் செய்யும்போது வாதிகள் பணத்தை கொடுத்ததாகவும், பின்னிட்டு திருத்தப்பட்ட வழக்குரையின்படி 1ம் வாதியும், நானும், என் மகன் ராஜ்குமாரும் சேர்ந்து பணத்தை கொடுத்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் வழக்கு தாக்கல் செய்து மூன்று வருடங்களுக்கு பிறகு மேற்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாற்றுப் பரிகாரத்திற்காகவும் மூன்று ஆண்டுகள் கழித்து வழக்குரையை திருத்தம் செய்தேன் என்றால் சரிதான். ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், வாதிகள் பிரதிவாதிக்கு கிரையத் தொகையாக ரூபாய் ஒன்றரை கோடி செலுத்தியதாக சொல்வதும் உண்மையல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு மேற்படி தொகையை கொடுக்கும் சக்தி இல்லை என்று பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்தபிறகு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட வழக்குரையில் நானும், 1ம் வாதியும், என் மகனும் முறையே எவ்வளவு தொகை கொடுத்தோம் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை. ஒப்பந்தத்திற்காக 2ம் வாதி பணம் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.14 ஆவணம் என்னுடைய வருமானவரி கணக்கு. 2020–2021–ல் கொரோனா காலம் என்பதால் எனக்கு வருமானம் இல்லை. 2019–2020 ஆண்டிலும் நான் வருமான வரி செலுத்தவில்லை. எவ்வளவு தொகை எனக்கு வந்தாலும், எவ்வளவு தொகை நான் கொடுத்தாலும் அதை நான் வருமானவரி கணக்கில் காட்ட வேண்டும். 2019 முதல் 2022 வரையில் உள்ள கால கட்டத்தில் ரூபாய் 50 லட்சம் மற்றும் ஒரு கோடி நாங்கள் கொடுத்ததாக வருமானவரி கணக்கில் காட்டவில்லை. வா.சா.ஆ.13 மற்றும் 14 ஆவணங்கள் இந்த பிரதிவாதியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என் மகன் மாத சம்பளம்

ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் சம்பாதித்து வந்ததாக காட்ட அவரது வங்கி கணக்கு தாக்கல் செய்துள்ளேன். என் மகன் 2021 லிருந்து CTS மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். என் மகன் 2009–ல் படிப்பை முடித்தார். CTS ல் வேலை செய்வதற்கு முன்பாக விப்ரோவில் வேலை செய்து வந்தார். அப்போது அவரது சம்பளம் மிகவும் குறைவு என்றால் ரூபாய் 60 ஆயிரம் மாத சம்பளமாக வாங்கினார். என் மகன் தற்போது பெங்களூருவில் வேலை செய்து வருகிறார். என் மகனும் வேலை பார்த்து சொத்தை கிரையம் வாங்குவதற்காக பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்குரையில் உள்ள பலவீனத்தை சரி செய்வதற்காக பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்தபிறகு நானும், என் மகனும் சொத்தை வாங்குவதற்காக பணம் கொடுத்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை கிரையம் வாங்குவதற்காக வாதிகளுக்கு சக்தி இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1–ல் கொடுக்கப்பட்டுள்ள கால அவகாசம் ஆறு மாதங்கள். ஆறு மாத காலத்திற்குள் நாங்கள் சொத்தை கிரையம் முடிக்கவில்லை. ஆறு மாத காலத்திற்குள் கிரைய பாக்கித் தொகையுடன் தயாராக இருப்பதாக சொல்லி சட்ட அறிவிப்பு கொடுக்கவில்லை. ஆறு மாத காலத்திற்குள் கிரைய பாக்கித் தொகை எங்களிடம் இருந்ததாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ 1ல் நிபந்தனை எதுவும் சொல்லப்படவில்லை. சொத்தில் வில்லங்கம் இருந்தால் அதை தீர்த்துவிட்டு கிரையம் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படவில்லை. பிரதிவாதியிடம் கிரையத்தை நான்தான் பேசினேன். முகவருடன் பேசினேன். முகவர்கள் பெயர் சின்ன சுப்பையா, சங்கரநாராயணன், முத்துப்பாண்டி, ராமமூர்த்தி. ராமமூர்த்தி நாலாட்டின்புதூரை சார்ந்தவர். சின்ன சுப்பையாவின் ஊர் பெயர் தெரியாது. சங்கரநாராயணன் கரிசல்பட்டியைச் சார்ந்தவர். மேற்படி

நான்கு பேரும் ரியல் எஸ்டேட் தொழிலுக்கான முகவர்கள். சொத்தை வாங்குவதற்கு முன்பாக நாங்கள் வில்லங்கச் சான்றிதழ் எடுத்து பார்க்கவில்லை. பட்டா எடுத்து பார்த்தோம். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதால்சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக வில்லங்கச் சான்றிதழ் எடுத்து பார்க்க வேண்டுமென்பது எனக்கு தெரியும். வில்லங்கச் சான்றிதழ் வலைதளத்திலும் பார்க்கலாம் என்றால் சரிதான். 1975 ம் ஆண்டிலிருந்தே வில்லங்கத்தை பார்க்கலாம் என்றால் சரிதான். சுரேஷ் சந்த், ரத்தன் சந்த் ஆகியோரிடம் சொத்து அடமானம் இருப்பதாகவும், அதை தீர்க்க வேண்டுமென்றும் வா.சா.ஆ1ல் நிபந்தனை இல்லை. பின்னிட்டு மேற்படி அடமானம் இருப்பது குறித்து எங்களுக்கு தெரியவந்தது. மேற்படி அடமானங்களுக்கான ஆவணத்தை பின்னிட்டு நான் பார்த்தேன்.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.07.22 18:04:44 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.